අධ්‍යාපන, විද්‍යා සහ තාක්ෂණ අමාත්‍යාංශය
கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
Ministry of Education, Science and Technology
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/06/05/01-2025
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2024.10.22

**சுற்றுநிருப இலக்கம் – 32/2024**

அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்வி பணிப்பாளர்கள்,
அனைத்து பிரிவெனாதிபதிகள்,
அனைத்து அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை அதிபர்கள்.

## பாடசாலை தவணை அட்டவணை - 2025

01. 2025 வருடத்தில் பின்பற்றப்படவேண்டிய பாடசாலைத் தவணை அட்டவணை மற்றும் உரிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**I. சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கு**

| தவணை | தவணைக் காலம் |
|---|---|
| முதலாம் தவணை | <u>முதலாம் கட்டம்</u><br>2025.01.27 திங்கள் முதல் 2025.03.14 வெள்ளி வரை<br>**(2025.03.15 ம் திகதி முதல் 2025.03.31 ம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.)** |
| | <u>இரண்டாம் கட்டம்</u><br>2025.04.01 செவ்வாய் முதல் 2025.04.11 வெள்ளி வரை<br>**(2025.04.12 ம் திகதி முதல் 2025.04.20 ம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.)** |
| | <u>மூன்றாம் கட்டம்</u><br>2025.04.21 திங்கள் முதல் 2025.05.09 வெள்ளி வரை<br>**(2025.05.10 ம் திகதி முதல் 2025.05.13 ம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.)** |
| இரண்டாம் தவணை | 2025.05.14 புதன் முதல் 2025.08.07 வியாழன் வரை<br>**(2025.08.08 ம் திகதி முதல் 2025.08.17 ம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.)** |
| மூன்றாம் தவணை | <u>முதலாம் கட்டம்</u><br>2025.08.18 திங்கள் முதல் 2025.10.17 வெள்ளி வரை<br>**(2025.10.18 ம் திகதி முதல் 2025.11.16 ம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.)** |
| | <u>இரண்டாம் கட்டம்</u><br>2025.11.17 திங்கள் முதல் 2025.12.19 வெள்ளி வரை |

அ.ப.பா

tamilguru.lk

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

II. முஸ்லிம் பாடசாலைகளுக்கு

| தவணை | தவணைக் காலம் |
|---|---|
| முதலாம் தவணை | **முதலாம் கட்டம்**<br>2025.01.27 திங்கள் முதல் 2025.02.28 வெள்ளி வரை<br>**(2025.03.01 ம் திகதி முதல் 2025.03.31 ம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.)** |
| | **இரண்டாம் கட்டம்**<br>2025.04.01 செவ்வாய் முதல் 2025.04.11 வெள்ளி வரை<br>**(2025.04.12 ம் திகதி முதல் 2025.04.20 ம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.)** |
| | **மூன்றாம் கட்டம்**<br>2025.04.21 திங்கள் முதல் 2025.05.23 வெள்ளி வரை<br>**(2025.05.24 ம் திகதி முதல் 2025.05.27 ம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.)** |
| இரண்டாம் தவணை | 2025.05.28 புதன் முதல் 2025.08.19 செவ்வாய் வரை<br>**(2025.08.20 ம் திகதி முதல் 2025.08.24 ம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.)** |
| மூன்றாம் தவணை | **முதலாம் கட்டம்**<br>2025.08.25 திங்கள் முதல் 2025.10.31 வெள்ளி வரை<br>**(2025.11.01 ம் திகதி முதல் 2025.11.16 ம் திகதி வரை விடுமுறை வழங்கப்படும்.)** |
| | **இரண்டாம் கட்டம்**<br>2025.11.17 திங்கள் முதல் 2025.12.19 வெள்ளி வரை |

02. அவ் அம் மாகாணக் கல்வி அமைச்சுக்கள் தமது மாகாணத்தின் விசேடமான நிலைமைகளுக்கு பொருத்தமான வகையில் பாடசாலைத் தவணை அட்டவணையில் மாற்றங்களை செய்வதற்கு கருதும் பட்சத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும், 1997 ஆகஸ்ட் மாதம் 08 ம் திகதியுடைய கல்வி மற்றும் உயர் கல்விச் செயலாளரின் 97/15 இலக்க சுற்றுநிருபத்திற்கமைய இந்த தவணை அட்டவணையில் மாற்றங்களை செய்ய முடியும்.

2.1. பாடசாலை தவணை அட்டவணை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 1997 ஆகஸ்ட் மாதம் 08 ம் திகதியுடைய கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் செயலாளரின் 97/15 இலக்க சுற்றுநிருபத்திற்கமைய இலங்கையின் அனைத்து பாடசாலைகளும் வருடமொன்றில் 210 நாட்கள் நடாத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தாலும், 2025 வருடத்தில் உள்ள அரச விடுமுறை தினங்கள் மற்றும் பாடசாலை வருடம் 2025 ஜனவரி மாதம் 27 ம் திகதியன்று ஆரம்பிக்கப்படுகின்றமையின் காரணத்தால் 210 நாட்கள் பாடசாலை நடாத்த முடியாதுள்ளது. 2025 வருடத்தில் அரச மற்றும் அரச அனுமதி பெற்ற அனைத்து தனியார் பாடசாலைகள் மற்றும் அனுமதி பெற்றுள்ள பிரிவெனாக்கள் 181 நாட்கள் நடாத்தப்படல் வேண்டும்.

2.2. 2025 வருடத்திற்குரிய க.பொ.த (உயர் தர) பரீட்சை ஒக்டோபர்/ நவம்பர் மாதத்திலும், 2024ம் ஆண்டிற்குரிய க.பொ.த (சாதாரண தர) பரீட்சை 2025ம் ஆண்டின் மார்ச் மாதத்திலும் நடாத்தப்பட உள்ளதால், பாடசாலைகளின் விடுமுறைக் காலம் இத் தவணை அட்டவணையில் தரப்பட்டுள்ள விதமாக வழங்கப்படல் வேண்டும்.

03. அரசினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பொது விடுமுறை தினங்கள், ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் தவணை விடுமுறை காலத்தினுள் அனைத்து பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும். இருப்பினும் விசேடமான காரணம் ஒன்றிற்காக பாடசாலை நடாத்தப்பட வேண்டிய தினம் ஒன்றில் பாடசாலை மூடப்பட வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில் அத் தினத்திற்கு பதில் நாள் ஒன்றில் பாடசாலை நடாத்தப்படல் வேண்டும்.

tamilguru.lk

04. 2025 வருடத்திற்குரிய அரச விடுமுறை நாட்காட்டி இத்துடன் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது என்பதுடன் (இணைப்பு-I) பாடசாலை செயற்பாடுகள் உள்ளடங்கிய நாட்காட்டியை கல்வி அமைச்சின் இணையத் தளத்தில், (www.moe.gov.lk) பிரசுரிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

இந்த தவணை அட்டவணையினை நடைமுறைப்படுத்தும் போது ஏதேனும் சிக்கல்கள் காணப்படும் பட்சத்தில் அவ் விடயம் தொடர்பில் பாடசாலை செயற்பாடுகள் கிளையின் கல்விப் பணிப்பாளரிடம் வினவுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொலைபேசி இலக்கம் - 011- 2784845

Jayasundara

ஜே.எம் திலகா ஜயசுந்தர
செயலாளர்

பிரதிகள் :-

1. பணிப்பாளர் நாயகம் (தேசிய கல்வி நிறுவகம்)
2. பரீட்சை ஆணையாளர் நாயகம்
3. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
4. பிரதம ஆணையாளர் – ஆசிரியர் கல்வி
5. கல்வி அமைச்சின் பதவி நிலை உத்தியோகத்தர்கள்,
6. பொது முகாமையாளர், இலங்கை புகையிரத திணைக்களம்
7. தலைவர், இலங்கை போக்குவரத்து சபை